செங்கல்பட்டு மாவட்டம், இலத்தூர் ஒன்றியம், தட்டாம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு நல வாரிய அட்டைகள் மற்றும் சீருடைகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் மு.பாபு, இலத்தூர் ஊராட்சி ஒன்றிய தலைவர்சாந்தி ராமச்சந்திரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அச்சிறுப்பாக்கம் – சித்தாமூர் – லத்தூர் 3 ஒன்றியங்களில்

25 ஊராட்சிகளில் ரூ.5 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 31 புதிய கட்டிடங்கள்!

மாவட்டச்செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்!

செங்கல்பட்டு, பிப்.16-

செங்கல்பட்டு மாவட்டம், இலத்தூர், சித்தாமூர், அச்சரப்பாக்கம் ஆகிய3 ஒன்றியங்களில் அடங்கிய25 ஊராட்சிகளில்ரூ.5 கோடிமதிப்பில்கட்டப்பட்டுள்ள 31 புதியகட்டிடங்களைகுறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் துவக்கிவைத்தார்.

செங்கல்பட்டு மாவட்டம் இலத்தூர் ஒன்றியம், தட்டாம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 6 ஊராட்சிகளில் புதியதாக 11 கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கூவத்தூர், திருவாதூர், செம்பூர், சிறுவங்குணம், பரமண்கேணி ஊராட்சிகளில் 5 புதிய நியாயவிலைக் கடை மற்றும் 2 புதிய அங்கன்வாடி கட்டிடங்கள் ரூ.85.50 இலட்சம் மதிப்பீட்டிலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் அணைக்கட்டு ஊராட்சியில் புதிய சமையலறை கட்டிடம் ரூ.9.07 இலட்சம் மதிப்பீட்டிலும்,

குழந்தை நேய பள்ளி உள் கட்டமைப்பு திட்டத்தின் கீழ் தட்டாம்பட்டு ஊராட்சியில் புதிய இரண்டு வகுப்பறை பள்ளி கட்டிடம் ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டிலும், கனிமவள நிதியின் கீழ் கடலூர் ஊராட்சியில் புதியதாக இரண்டு அங்கன்வாடி கட்டிடம் ரூ.33.10 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் 11 புதிய கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்குகுறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, சித்தாமூர் ஒன்றியம், இந்தலூர் ஊராட்சியில் சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தில் 8 ஊராட்சிகளில் புதியதாக 10 கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பருக்கல் தண்டலம், வெடால், ஈச்சூர் ஊராட்சிகளில் 1 ஊராட்சி மன்ற கட்டிடம், 3 அங்கன்வாடி கட்டிடங்கள் ரூ.79.35 இலட்சம் மதிப்பீட்டிலும், நபார்டு திட்டத்தின் கீழ் சூணாம்பேடு ஊராட்சியில் இரண்டு வகுப்பறை கொண்ட பள்ளி கட்டிடம் ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டிலும்,

15வது நிதிக் குழு மான்ய திட்டத்தின் கீழ் இந்தலூர் ஊராட்சியில் துணை சுகாதார மைய கட்டிடம் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டிலும், கனிமவள நிதியின் கீழ் வன்னியநல்லூர் ஊராட்சியில் அங்கன்வாடி மைய கட்டிடம் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டிலும், இராஷ்டிய கிராம சுவராஜ் அபியான் திட்டத்தின் கீழ் பொலம்பாக்கம் ஊராட்சியில் மண்டல அளவிலான கட்டிடம் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ்சூணாம்பேடு, இந்தலூர் ஊராட்சிகளில் புதிய 2 சமையவறை கட்டிடங்கள் ரூ.15.12 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஆக மொத்தம் ரூ.1.84 கோடி மதிப்பீட்டில் 10 புதிய கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் துவக்கி வைத்தார்.

மேலும், அச்சரப்பாக்கம் ஒன்றியம், பெரும்பேர்கண்டிகை ஊராட்சியில் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் 9 ஊராட்சிகளில் புதியதாக 10 கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பெரும்பேர் கண்டிகை, தொழுப்பேடு, விளாங்காடு ஊராட்சிகளில் 2 அங்கன்வாடி கட்டிடங்கள். 1 நியாயவிலைக் கடை கட்டிடங்கள் ரூ.46.46 இலட்சம் மதிப்பீட்டிலும்,

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் மாத்தூர், களத்தூர், சிறுதாமூர் ஊராட்சிகளில் 1 புதிய அங்கன்வாடி கட்டிடம், 2 புதிய நியாயவிலைக் கடை கட்டிடங்கள் ரூ.36.25 இலட்சம் மதிப்பீட்டிலும், நபார்டு திட்டத்தின் கீழ் தொழுப்பேடு ஊராட்சியில் இரண்டு வகுப்பறை கொண்ட பள்ளி கட்டிடம் ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டிலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் அச்சிறுப்பாக்கம், பள்ளிப்பேட்டை ஊராட்சிகளில் புதிய 2 சமையலறை கட்டிடம் ரூ.18.16 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஊராட்சி உபரி நிதி திட்டத்தின் கீழ் பொற்பனங்கரணை ஊராட்சியில் புதிய அங்கன்வாடி கட்டிடம் ரூ.16.00 மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.1.51 கோடி மதிப்பீ 10 புதிய கட்டிடங்களைகுறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார்கள்.

இன்றைய தினம் 3 ஊராட்சி ஒன்றியங்களில் 25 ஊராட்சிகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் 31 புதிய கட்டிடங்கள் ரூ.4.97 கோடி மதிப்பீட்டிலான கட்டிடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன்அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும், இந்நிகழ்ச்சிகளில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார்.

இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் மு.பாபு. திட்ட இயக்குனர் (ஊரக வளர்ச்சி முகமை) ஸ்ரீதேவி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், இலத்தூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் சாந்தி ராமச்சந்திரன். சித்தாமூர் ஒன்றிய குழுத் தலைவர் எழுமலை, அச்சரப்பாக்கம் ஒன்றிய குழுத் தலைவர் கண்ணன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் திமுக சார்பில் வெல்லும் தமிழ் பெண்கள் பயிற்சி பாசறை கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். தலைமைக் கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாநில பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் கலந்து கொண்டு பாசறைப் பயிற்சி வழங்கினர்கள் உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஜெ.மூர்த்தி, மு.பகலவன், கவிகணேசன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், ராபர்ட்ராஜதுரை, கே.சுப்பிரமணி பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, வெங்கடாஜலபதி, பரிமளம்விஸ்வநாதன், அபிராமி குமரவேல், ராஜராஜேஸ்வரி ஒன்றிய செயலாளர் ஆ.ராஜா மற்றும் திமுக நிர்வாகிகள் மகளிர்கள் என 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மேயர் பிரியா ராஜன் தலைமை!

500 கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை - உபகரணங்கள்!

அமைச்சர் – முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – தேவயானி – அர்ஜுன் தாஸ் வழங்குகின்றனர்!

சென்னை, பிப்.16-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், வி.க.நகர் வடக்கு பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா - 1", அன்புன் அறமும் திராவிட மாடல்! ஆதவன் ஒன்றே அனைவரின் காவல்! எனும் தலைப்பில், மாபெரும் நலத்திட்டம் இன்று (16.2.2026 - திங்கட்கிழமை) அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, மங்களபுரம், அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, கழக அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, பெரம்பூர்ஆர்.ராஜன், புதின வதிஎத்திராசன் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, லயன் பி.உதயசங்கர் முன்னிலை வகிக்கின்றனர்.

தில்லை கதிரவன், புல்லட்கி.ரமேஷ், பி.புவனவதி, கினார் ஆறுமுகம், எஸ்.புஷ்பராஜ், பரிமளா சுரேஷ், மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ. டீக்கா, எம்.இசட்.அபோய், மு.சரவணன் எம்.சி, ரமணி லோகேஷ் எம்.சி, தமிழ் செல்வி சசிகுமார் எம்.சி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் - 150 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி - 500 கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் உபகரணங்களை - பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரைக்கலைஞர் தேவயானி, திரைக்கலைஞர் அர்ஜுன் தாஸ் ஆகியோர் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, தண்டலம் என்.கிருஷ்ணமூர்த்தி, ப.ரங்கநாதன், தமிழன் பிரசன்னா, சங்கரிநாராயணன், எஸ். மணிமுடி,

பி.கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ் குமார், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, பரிதிஇளம் சுருதி எம்.சி, வே.உமாகாந்த், புலவர் சாமிநாகப்பன், ஆர். வரதன், மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.எம்.தேவன் இசட். ஆசாத் எம்.சி., மண்டலகுழு தலைவர்கள்: கூ.பீ.ஜெயின் எம்.சி., பா.ஸ்ரீராமுலு எம்.சி., டாக்டர்,சாந்தகுமாரி எம்.சி.,

பகுதி கழக செயலாளர்கள் சொ.வேலு எம்.சி., ஐ.சி. எப்.வ.முரளிதரன் எ.நாகராசன் எம்.சி., வே.வாசு, டி. எஸ்.பி.இராஜகோபால் எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ் வி.சுதாகர் எஸ்.முரளி எஸ். இராஜசேகர் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.ஜெ.துள சிங்கம் டி.வி.செம்மொழி எம்.சி., சாவித்திரிவீரராகவன் ரமேஷ் (எ) லேகண்டன் எம்.சி., எஸ்.பன்னீர்செல்வம் கோ.மணி எம்.இப்ராஹிம் கனி அ.நிர்மலாதேவி டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா இரா. கலைச்செல்வி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள்: வானவில் விஜய் எஸ். தனசேகர் ஜெ.பாலமுருகன் பா.ஜெகதீஷ் க.வினோத் ஜி.ஜெ.பிரபு ஆர்.டி.சங்கர் நானா,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் நா.துலு க்காணம் எம்.பெரோஸ்கான் கா.ராஜ்முகமது இரா.வீரமணி எல்.பி.எப்.மோகன் துரைகண்ணன் சுதாதீனதயாளன் எம்.சி., ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி., ஜி.வி.நாகவள்ளி, ஜி.தாமோதரன் பி.விஜய குமார் எம்.விநாயகம் க. பா.பிரதீப்குமார் ஆர்.எஸ். சித்திக் ம.அசோக்குமார் கு. கிருஷ்ணமூர்த்தி எல்.சம்பத் குமார் து.ஆயிரம், அ.கோவிந்தன் பி.சுகுமார் த.கருணாநிதி வனஜாசண்முகம் அ.கருணாநிதி,

திரு வி.க.நகர் தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் தே.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ் எம்.தமிம் வி.க.வெங்கடேசன் எஸ்.சசிகுமார் எஸ்.வெங்கடேசன் பா.பி.தாஸ், திரு வி.க.நகர் வடக்கு தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் வி. ஜெகன் கே.என்.விஜய்(எ) ஸ்வீட்பாபு டி.சீனிவாசன் மதுரைபிரகாசம் எம்.துரைசாமி ஜெ.அண்ணாதுரை க.எழிலன் டி.ராஜு பி.இளஞ்செழியன் பி.சத்தீஷ் ஆர்.ராஜராஜன் வ.நாமதேவன் எம். விஜயகுமார் இரா.புருஷோத்தமன்

எல்.சுப்பிரமணி அ.விஜயகுமார் வெல்டிங்எஸ்.பாபு வே.து.தாமரைச்செல்வன் நெல்லை.மா.முத்தையா பா.பாபுமனோகரன் சி.நாகலிங்கம் அ.கதிரவன் எச்.திவாகர் ஆர்.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார் நன்றி கூறுகிறார்.

"உள்நாட்டு உற்பத்தி பேசும் ஒன்றிய அரசு, கப்பல் கட்டுமானத்தை வெளிநாடுகளிடம் ஒப்படைத்ததா?"

"கப்பல் கட்டுமானத்தில் வெளிநாட்டு இறக்குமதி பிடியில் இந்தியா உள்ளதா?

மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

புதுடெல்லி, பிப். 16 –

டெல்லியில் பாராளுமன்ற மாநிலங்களவை ஓட்டத்துடன் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினர் கேஆர்.என்.இராஜேஸ்குமார், இந்திய "கப்பல் கட்டுமானத்தில் வெளிநாட்டு இறக்குமதி பிடியில் இந்தியா உள்ளதா? உள்நாட்டு உற்பத்தி பேசும் ஒன்றிய அரசு, கப்பல் கட்டுமானத்தை வெளிநாடுகளிடம் ஒப்படைத்ததா? என மாநிலங்களவையில் ஒன்றிய அரசை கடுமையாக கேள்வி எழுப்பினார்.

நேரமில்லா நேர கேள்வி நேரத்தில், "கப்பல் கட்டுமானத்திற்கு தேவையான கடல்தர எஃகு, இயந்திர இயக்க அமைப்புகள் (Propulsion Systems), வழிநடத்தல் உபகரணங்கள் உள்ளிட்ட கூறுகளில் இந்தியா எவ்வளவு அளவு இறக்குமதிகளை சார்ந்துள்ளது? கடந்த ஐந்து ஆண்டுகளில் அதன் அளவு மற்றும் மதிப்பு என்ன? இந்திய "கப்பல் கட்டுமானத்தில் வெளிநாட்டு இறக்குமதி பிடியில் இந்தியா உள்ளதா? உள்நாட்டு உற்பத்தி பேசும் ஒன்றிய அரசு, கப்பல் கட்டுமானத்தை வெளிநாடுகளிடம் ஒப்படைத்ததா??

இந்த கூறுகளின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த துறைமு கங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால்,, இந்தியாவின் கப்பல் கட்டுமானத் துறையில் பயன்படுத்தப்படும் கூறுகளுக்கான இறக்குமதி சார்பு குறித்து இந்திய அரசு மதிப்பீடு செய்துள்ளது.

சில கப்பல் கட்டுமான கூறுகளுக்கான தேவைகளை உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தற்போது பூர்த்தி செய்து வருகின்றனர்.

ஆனால், கடல் இயந்திரங்கள் (Marine Engines), இயந்திர இயக்க அமைப்புகள் (Propulsion Systems), வழிநடத்தல் உபகரணங்கள் (Navigation Equipment) போன்ற சில முக்கிய கூறுகளுக் காக இந்தியா இன்னும் இறக்குமதிகளை சார்ந்துள்ளது.

இது தொடர்பாக, கொச்சின் கப்பல் கட்டுமான நிறுவனம் (Cochin Shipyard Limited – CSL) மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் (2021 முதல் 2025 வரை) மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகளின் அளவு மற்றும் மதிப்பு விவரங்கள் அனெக்சர் – I ல் இணைக்கப்பட்டுள்ளது. . கப்பல் கட்டுமான நிதி உதவி திட்டம் (SB FAS), மேலும், கப்பல் கட்டுமானத் துறையில் உள்நாட்டு உற்பத்தி மற்றும் கப்பல் கட்டுமான கூறுகளின் கொள்முதலை ஊக்குவிக்கும் நோக்கில், கப்பல் கட்டுமான நிதி உதவி திட்டம் (Shipbuilding Financial Assistance Scheme – SBFAS) அமல்படுத்துவதற்கான வழிகாட்டு தல்களை மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ்:

40 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட உள்நாட்டு உள்ளடக்கம் கொண்ட கப்பல்களுக்கு முழு நிதி உதவி வழங்கப்படும்.30 சதவீதம் முதல் 40 சதவீதத்திற்கு குறைவான உள்நாட்டு உள்ளடக்கம் கொண்ட கப்பல்களுக்கு விகிதாசார அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படும். 30 சதவீதத்திற்கு குறைவான உள்நாட்டு உள்ளடக்கம் கொண்ட கப்பல்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் எந்த நிதி உதவியும் வழங்கப்படாது.

கொச்சின் கப்பல் கட்டுமான நிறுவனம் (CSL) – கடந்த 5 ஆண்டுகளின் இறக்குமதி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டு தல்கள் மூலம், உள்நாட்டு கப்பல் கட்டுமானத் துறையை வலுப்படுத்தவும், உள்நாட்டு கூறுகளின் பயன்பாட்டை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

100 நாள் வேலை ரத்து விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டைப் புறக்கணித்த, ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து! கண்டன ஆர்ப்பாட்டம் திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் செவ்வாப்பேட்டையில் ஒன்றியச் செயலாளர் சே.பிரேம்ஆனந்த் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுக்குத்தகை கே.ஜெ.ரமேஷ் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இதில் பொதுக்குழு உறுப்பினர் ஜெ.மகாதேவன், மற்றும் நிர்வாகிகள் கூட்டணி கட்சி தோழர்கள் உள்ளனர்

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வாழை விவசாயிகள் மேம்பாட்டிற்கு

ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் – ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, பிப்.16-

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வாழையை மிகுதியாக உற்பத்தி செய்யும் தருமபுரி போன்ற மாவட்டங்களில் வாழை உற்பத்தி,பரப்பளவு,மகசூல் குறித்து மதிப்பீடு செய்ய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

தமிழ்நாட்டில் வாழை விவசாயிகளுக்கு நடவு பொருள் விநியோகம்,நோய் எதிர்ப்பு வகைகள்,ஒருங்கிணைந்த பூச்சி தடுப்பு மேலாண்மை உள்ளிட்ட உதவிகளுக்கு மத்திய திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை தமிழ்நாட்டிற்கு நீட்டித்து உள்ளதா ?

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வாழை மதிப்பு சங்கிலி,குளிர்பதன சேமிப்பு வசதி,சந்தையை இணைக்கும் வகை யிலான போக்குவரத்து கட்டமைப்புகளை மேம்படுத்த ஒன்றிய அரசால் ஒதுக்கப்பட்டு,பயன்படுத்தப்பட்டுள்ள நிதி குறித்த விவரங்கள் என்ன?

தருமபுரி போன்ற வேளாண்மை பாதிக்கபட்ட மாவட்டங்களில் நேரடி நிவாரணமோ அல்லது காப்பீட்டு ஆதரவினையோ ஒன்றிய அரசு அளித்துள்ளதா? மேலும் வாழை உற்பத்தியை பெருக்க,அதன் விலையை நிலைப்படுத்த, பதப்படுத்துதல் மற்றும் வாழை ஏற்றுமதி வாய்ப்புகளை பெருக்கும் வகையில் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று வேளாண்மை மற்றும் விவசாயி கள் நலத் துறை அமைச்சர் ராம்நாத் தாக்கூரிடம் தருமபுரி எம்.பி.வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1.31 கோடி மகளிர்களுக்கு வங்கிக்கணக்கில், பிப்ரவரி முதல் ஏப்ரல் வரையிலான முன்பணம் 3,000 மற்றும் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பு 2,000 என மொத்தம் 5,000 வரவு வைத்துள்ளார்கள். இந்த மகிழ்ச்சியான செய்தியை பொதுமக்களுடன் கொண்டாடும் வகையில், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் கவரப்பேட்டை பஜார் பகுதியில்ஒன்றிய செயலாளர் கி.வேணு ஆனந்த் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். உடன் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.